தமிழ் நாடு அரசு

சுருக்கம்

**மோட்டார் வாகனம் - நகர் மன்றத் தலைவர்கள் நகராட்சிகளுக்கு சொந்தமான வாகனங்கள் உபயோகம் மற்றும் செலவிடப்படும் எரிபொருட்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்-ஆணை வெளியிடப்படுகிறது.**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நு.இ.5) துறை

அரசாணை (நிலை) எண்.105 நாள்:26.4.99

படிக்கப்பட்டது:

1. அரசாணை எண்.212, நிதி (படி-1) நாள்: 14.5.98.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண் 76163/98/இ1 நாள் 8.1.99

-----

**ஆணை:**

அரசு அலுவலர்கள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு செலவிடப்படும் எரிபொருட்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதுபோல் நகர்மன்ற தலைவர்கள் பயன்படுத்தும் வாகனங்களின் எரிபொருட்களுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை.

2. நகராட்சி வாகனங்களை நகர் மன்றத் தலைவர்கள் உபயோகிப்பதற்கு விதிக்கப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் குறித்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அதன்படி நகர் மன்றத் தலைவர்கள் பயன்படுத்தும் நகராட்சிகளுக்கு சொந்தமான வாகனங்களின் உபயோகம் மற்றும் எரிபொருள் உச்சவரம்பு குறித்து கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

(அ) நகர் மன்றத் தலைவர்கள் பயன்படுத்தும் நகராட்சிகளின் வாகனங்களை நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களுக்கு மட்டும் செல்லப் பயன்படுத்த வேண்டும். மாவட்டத் தலைமைப் பணியிடத்திற்கு (District Headquarters) அலுவலகப் பணிகளை முன்னிட்டு செல்ல மட்டும் அவை பயன்படுத்தப்படலாம்.

(ஆ) (i) முதல் மற்றும் இரண்டாம் நிலை நகராட்சிகளின் நகர் மன்றத் தலைவர்கள் பயன்படுத்தும் நகராட்சிகளின் வாகனங்களுக்கு எரிபொருள் உச்சவரம்பு மாதத்திற்கு 150 லிட்டர் (நூற்றிஐம்பது மட்டும்) என நிர்ணயிக்கப்படுகிறது.

(ii) சிறப்பு நிலை மற்றும் தேர்வுநிலை நகராட்சிகளின் நகர் மன்றத் தலைவர்கள் பயன்படுத்தும் நகராட்சிகளின் வாகனங்களுக்கு எரிபொருள் உச்சவரம்பு மாதத்திற்கு 200 லிட்டர் (இருநூறு மட்டும்) என நிர்ணயிக்கப்படுகிறது.

(இ) நகராட்சிகளுக்கு சொந்தமான வாகனங்களை நகர்மன்றத் தலைவர்கள் அலுவலகப் பயன்பாட்டைத் தவிர சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தப்படக் கூடாது.

(ஈ) நகராட்சிகளுக்கு சொந்தமான வாகனங்கள் நகர் மன்றத் தலைவர்களால் மாவட்டத் தலைநகருக்கு அலுவல் நிமித்தமாக செல்ல மட்டும் உபயோகிக்கப்பட வேண்டும். மேலே இனம் (ஆ)ல் நிர்ணயிக்கப்பட்ட எரிபொருள் உச்சவரம்பிற்குள்தான் அத்தகைய பிரயாணங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி,
அரசு செயலர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.5
நகர் மன்றத் தலைவர்கள்,
அனைத்து நகராட்சிகள்
நகராட்சி ஆணையர், அனைத்து நகராட்சிகள்
நகல்:
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பொது) துறை, சென்னை.9
உ.த./இ.கோ.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்